ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர்: 435) Jan (2) / 2025

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் 3

2. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)...4

3. ஸ்தோத்ர ரத்னம் (பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)...........................21

Website: www.namperumal.com
email: sridharan_book@yahoo.co.in
Blog:namperumal.wordpress.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 255)

கணேச முத்திரை

64-2. தக்ஷிணேந து ஹஸ்தேந ஸாங்குஷ்டேந து முஷ்டிநா
65. ப்ரதேசிநீமநாமர் ச வாமஹஸ்தஸ்ய பீடயேத்
ப்ரயத்நீக்ருத சாகாநாம் ப்ருஷ்டே யோஜ்யாத மத்யமா
66. லம்பமாநகராகாரா யதா ஸந்த்ருச்யதே ச ஸா
முஷ்டேர்நாதிஸமீபஸ்தாம் வாமஹஸ்தாத் கநிஷ்டிகாம்
67. தக்ஷிணாங்குஷ்ட பார்ச்வேந தம்ஷ்ட்ராவத் பரிபாவயேத்
ஈஷத் திர்யக்கதி ஸ்பஷ்டௌ வாம: அங்குஷ்ட: ததா பர:
68. யதா தௌ பரித்ருச்யேதே கஜகர்ணோபமௌ சுபௌ
கணேச்வரஸ்ய முத்ரைஷா ஸர்வவிக்ந க்ஷயங்கரீ

குறிப்பு – இது அனைத்து தடைகளையும் விலக்கும் கணேச முத்திரை ஆகும்.

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 400)

வ்யாக்யானம் - தோழிமாரும் தானுமாக "இனி அவன் வந்தாலு மவனுக்கு முகங்கொடுத்தல், வார்த்தை சொல்லுதல் செய்யக்கடவோமல்லோம்" என்று ஸங்கல்பித்து, "அவனறியாத தோரிடத்தே போயிருக்கவேணும்" என்று பார்த்து; காயாம் பொழிலாய், அதிலே விளையாடு சூழலாய், அதின் நடுவே அதி மநோஹரமாய் இருப்பதொரு மண்டபமாய், அதிலே இவர்களெல்லாருங் கூடிக் கழகமாகவிருந்து, வந்தாலும் மவனுக்கு இட்டீடு கொள்ளுகைக்குப் பற்றாசில்லாதபடி பூவை கிளி தொடக்கமான அசேதநமாயும் சேதநமாயுமுள்ள லீலோபகரணங்களை ஊரழி பூசலில் அரணுள்ள கோட்டைகளிலே சரக்கு வாங்குவாரைப்போலே ஓரிடத்தே திரள வாங்கி, இனி இவர்கள் மறந்தவை ஏதேனுமுண்டாகில் அது பெற்று அவனுக்கு ஸத்தையுண்டாக வேண்டும்படியாய், இப்படி யிவர்கள் சமயமிட்டு, வந்தாலும் அவனுக்குப் புகுர வொண்ணாதபடி அநாதரமாகிற கன்மதிளை உரக்க விட்டு, அவனுடைய ஸர்வஜ்ஞத்வங் கொண்டு காரியங்கொள்ளுகைக்கு ஒரு வழியில்லாதபடியும் ஸர்வசக்தித்வங் கொண்டு வ்யாபரிக்கவொண்ணாதபடியாகவும் இவர்கள் வ்யவஸ்தை பண்ணியிருந்து, க்ருஷ்ண வ்ருத்தாந்தம் சொல்லுவார் "கச்சித் ஸுகுலீ க்ருஷ்ண:" என்று இப்பிதற்றுத்தானென் என்று, "அதவாகிந்த தாலாபை:" என்பாராய், ஆஸுரப்ரக்ருதிகளான உகவாத ஹிரண்யாதிகள் கோஷ்டிகளில் திருநாமம் சொல்லுகை அஸஹ்யமாமோபாதி, இவர்கள் கோஷ்டியிலும் தலைமண்டையிட்டு, திருநாமஞ்சொல்லில் நெஞ்சு சிவிட்கென்னும் படியாய்க் கொண்டிருந்தார்கள் இவர்கள். இது இத்தலையிருந்தபடி.

விளக்கம் - இப்படியாக நிச்சயித்த பராங்குச நாயகி தனது தோழிமார்களுடன் சேர்ந்து, "இனி அவன் வந்தாலும், நாம் அவனுக்கு முகம் கொடுத்து உரையாடுதல் போன்றவற்றை நிச்சயம் செய்யமாட்டோம்", என்று ஸங்கல்பம் செய்தாள். தொடர்ந்து, "அவன் அறியாமல் உள்ள இடத்திற்குச் செல்லவேண்டும்", என்று எண்ணினாள். ஆகவே காயாம்பொழிலாக, அதில் மணல் கொண்டு சிறுவீடு கட்டி விளையாடுவதற்கு ஏற்றதாக, அந்தப் பொழிலின் நடுவில் மனதைக் கவரும்படியாக உள்ள ஒரு மண்டபம் கொண்ட இடத்தைத் தேர்தெடுத்தாள். அங்கு இவர்கள் அனைவரும் ஒரே கூட்டமாகக் கூடி நின்று, இவன் வந்தாலும், சொற்கள் கூறி அவனிடமிருந்து பதில் சொற்கள் கேட்பதற்கான வாய்ப்பு இல்லாதபடியாக, பூவை மற்றும் கிளி தொடக்கமாக உள்ள அசேதனம் மற்று சேதநமான விளையாட்டுப் பொருள்களை, ஊர் அழியும்படியான பூசல்கள் போன்றவை நிறைந்துள்ள அரண் அமைக்கப்பட்ட கோட்டைகளில் பொருள்கள் வாங்குபவர்கள் போன்று வாங்கி, அங்கு இருந்தனர். அவர்கள் அங்கிருந்து சென்ற பின்னர், அங்கு வரும் அவன், இவர்கள் அங்கு மறந்து விட்டுச் சென்றதை எடுத்துக் கொண்டு அவர்களிடம் செல்கிறான். அப்போது இவர்கள், "என்னுடைய பந்தும் கழலும் தந்து போகு", என்கிறார்கள். இப்படி அவர்கள் அவன் வருவதற்கான ஒரு வாய்ப்பு அளித்து, அவன் வந்தாலும், அவனால் புக இயலாதபடியாக "ஈடுபாடு இன்மை" என்று ஒரு வலிய மன மதிலை எழுப்புகிறார்கள். இதன் மூலம் அவனுடைய "அனைத்தையும் அறித்த தன்மை" கொண்டு தனது விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள அவனுக்கு எந்த் ஒரு வழியும் இல்லாதபடியும், தனது எல்லையற்ற சக்தி கொண்ட தன்மை மூலம் அவன் எந்தச் செயலும் செய்ய இயலாதபடியும் இவர்கள் உறுதி பூண்டிருந்தார்கள். க்ருஷ்ணனுடைய லீலைகளை கூறுபவர்கள், ஸ்ரீவிபு. (5-24-12) - கச்சித் ஸுகுலீ க்ருஷ்ண: – க்ருஷ்ணன் எப்படி உள்ளான் - என்று குசலம் விசாரிப்பர்; அதனைக் கேட்ட சிலர் "அதவாகிந்த தாலாபை: - இந்தச் சொற்களால் என்ன பயன்", என்பர். இதனைப் போன்று, அஸுர பிறவிகளான இரணியன் முதலானவர்கள் கூட்டத்தில் பகவானின் திருநாமத்தைக் பொறுக்க இயலாதபடி இருந்தது போன்று இவர்கள் இருந்தனர். இப்படியாகப் பராங்குச நாயகியின் நிலை இருந்தது.

வ்யாக்யானம் - இனி, அத்தலை இருந்தபடியென்னென்றால்; "வேறுகொண்டு உம்மை யானிரந்தேன்" என்கிற ஆர்த்தநாதம் செவிப்பட்டது. (சுசிச்ரவா:) நல்லது செவிப்படுமவனிறே. இவ்வளவில் ஆறியிருக்குமவனன்றே; (பரமாபதமாபந்ந:)

என்று கொண்டு ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய ஆர்த்தநாதம் செவிப்பட்டபோது "அஸ்வீக்ருத ப்ரணீத மணிபாதுகம் கிமிதி சாகுலாந்த:புரம் | அவாஹந பரிஷ்க்ரியம்" என்கிறபடியே திருவடி நிலை கோத்து எழுந்தருளப் பற்றாமை, வெறுந்தரையிலே பத்தெட்டடி இட்டும் ஜகத் ஸ்ருஷ்ட்யாதிகளிலும் நினைவுக்கு மேற்பட ஒன்றும் காணாமையாலே, இப்பதற்றம் இருந்தபடியால் "இது இவ்வளவுகளிலன்று. இதுக்கடியென்?" என்று திவ்யாந்த:புரம் கைநெருக்கும்படியாய், பாவஜ்ஞனான பெரியதிருவடியைப் பண் செய்தேறப் பெறாதே வெறும் புறத்தே மேற்கொண்டு "பகவதஸ் த்வராயை நம:" என்று அறிவுடையார் ஈடுபடும்படி வந்து தோற்றினாற்போலவும்;

விளக்கம் - இவர்கள் இவ்விதம் இருந்தனர் என்றால், அவன் எப்படி இருந்தான் என்பதைக் கூறுகிறார். இவளுடைய பிரிவாற்றாமை குறித்து இவள் விடுத்த தூதன் அவனிடம் சென்று அறிவிக்க, அவனும் இவளிடம் வந்து, "உன்னுடைய துன்ப ஒலி நமக்குக் கேட்டது. ஆகவே நாம் வந்தோம்", என்றான். ஆனால் இவள் இங்கு நின்று அழைப்பது அவனுக்குக் கேட்குமோ என்பதற்கு விடை அருளிச்செய்கிறார்; ஸஹஸ்ர நாமத்தில் - சுசிச்ரவா: - நல்ல சொற்களைக் கேட்பவன் - என்று உள்ளது காண்க. சரி, இவ்விதம் இவளுடைய கூக்குரல் கேட்டால், மெதுவாக வரலாம் அல்லவோ என்பதற்கு விடை அளிக்கிறார்; அது போன்று பொறுமையுடன் இருப்பவன் அல்லன். துன்பத்தில் எழுந்த கூக்குரல் கேட்டவுடன் வேகமாக இவன் வந்தமைக்கும், பொறுமையுடன் இராமை என்பதற்கும் வரிசையாக மூன்று உதாரணங்களை கூறுகிறார். மஹாபாரதம் - பரமாபதமாபந்ந: – மிகப் பெரிய ஆபத்தை அடைந்தது – என்றுள்ள ஸ்ரீகஜேந்த்ரனுடைய கூக்குரலைக் கேட்டவுடன், ஸ்ரீரங்கராஜஸ்தவம் (2-57) – அதந்த்ரித சமூபதி ப்ரஹித ஹஸ்தம் அஸ்வீக்ருத ப்ரணீத மணிபாதுகம் கிம் இதி ச ஆகுல அந்த:புரம் அவாஹந பரிஷ்க்ரியம் பதகராஜம் ஆரோஹத: கரிப்ரவர ப்ரும்ஹிதே பகவத: த்வராயை நம: - கஜேந்த்ரனின் கூக்குரலானது பெரியபெருமாளின் செவியில் விழுந்தவுடன் ஏற்பட்டது என்ன? ஸேனைமுதலியார் கைகொடுத்ததைக் காணவில்லை; ரத்னக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகைகளை சாற்றிக் கொள்ளவில்லை; "என்ன இது" என்று பிராட்டிமார்கள் திகைத்துப் போய் நின்றனர்; வாகனங்களில் செல்லும் ஆயுத்தங்கள் ஏதும் நிகழவில்லை; கருடவாகனத்திலும் செல்லவில்லை; இப்படியாக இருந்த நம்பெருமாளின் பதற்றத்திற்கும் வேகத்திற்கும் எனது

நமஸ்காரங்கள் - என்பதாக பெரியதிருவடியான கருடன் மீது எழுந்தருளுக் கூடப் பொறுமை இன்றி, வெறும் தரையில் பத்து எட்டடி ஓடி வந்தான்; அந்த ஜகத்தை ஸ்ருஷ்டித்த நேரத்தில் செய்த செயல்களைக் காட்டிலும், இங்கு தான் அமர்ந்து செல்வதற்கு எதனையும் காணாமையால், இந்தப் பதற்றம் அதிகமாகவே இருந்தது; "இதற்கு ஏற்பட்ட ஆபத்து இந்த அளவு என்று கூற இயலாது. இதனை எவ்விதம் போக்குவது" என்று எண்ணியவனாக, தனது திவ்யமான அந்தப்புரத்தில் இருப்பு கொள்ளாமல், அனைத்தும் அறிந்தவனாகிய கருடன் மீது அலங்காரமாக ஏறி வராமல், வெறுமனே ஓடிவந்து, ஸ்ரீரங்கராஜஸ்தவம் (2-57) – பகவதஸ் த்வராயை நம: – பகவானுடைய வேகத்திற்கு நமஸ்காரம் - என்று அறிவுள்ளவர்கள் ஈடுபடும்படியாக வந்து தோன்றினான்; இது முதல் உதாரணம் ஆகும்.

வ்யாக்யானம் - த்ரௌபதியை துச்சாஸநன் நலிகிறபோது ரக்ஷகராக ப்ரஸித்தரான பர்த்தாக்கள் ஐவரிருக்க, (கோவிந்தேதி யதாக்ரந்தத்) என்று நம்மை ரக்ஷகராக நினைத்துக் கூப்பிட, (மாம் தூரவாஸிநம்) என்று "நான் ஸந்நிஹிதனாய் உதவப் பெற்றிலேன் அவளாபத்துக்கு" என்று நொந்து, "அவள் தனக்கு அடுக்கும்படி செய்தாள். நான் அவதரித்தே அவதார ப்ரயோஜநமொன்றும் பெற்றிலேன்" என்று இழவாளனாய், தர்மபுத்ரன் தலையிலே முடியையும் வைத்து, இவள் குழலையும் முடிப்பித்து விரோதி வர்க்கம் கிழங்கெடுத்துப் பொகட்டுத் "தன்னுடைச் சோதி"யேற எழுந்தருளுகிறபோதும் (நாதிஸ்வஸ்தமநா:) என்று திருவுள்ளம் புண்பட்டாற் போலவும்;

விளக்கம் - த்ரௌபதியை துச்சாதனன் துன்புறுத்தியபோது, அவளைக் காப்பாற்றுபவர்களாக கணவன்மார்கள் ஐந்து பேர் இருந்தபோதிலும், அவள் மஹாபாரதம் உத்யோகபர்வம் (59-22) – கோவிந்தேதி யதாக்ரந்தத் – கோவிந்தா - என்று நம்மையே காப்பாற்றுபவனாக அழைத்தாள்; அப்போது நான், மஹாபாரதம் உத்யோகபர்வம் (58-22) - மாம் தூரவாஸிநம் – வெகு தூரத்தில் இருந்தேன் - என்பதாக, "நான் அவள் அருகில் இருந்து உதவப் பெற்றிலன்" என்று நொந்து கொண்டான். "அவள் தனக்கு ஏற்ற செயலைச் செய்தாள். நான் இங்கு அவதாரம் செய்துள்ளபோதிலும், அந்த அவதாரத்தால் எந்தப் பயனும் அடையவில்லை என்பவன் ஆனேன்" என்று தன்னை இழப்பாளனாக எண்ணினான். விரோதிகளுடைய கூட்டத்தை முடிந்து, த்ரௌபதியின் கூந்தலை

அவள் முடிந்து கொள்ளும்படிச் செய்து, தர்மபுத்திரனுக்கு முடி சூட்டியும், “தன்னுடைய சோதி” என்பதாக உள்ள தான் இந்த உலகை விட்டுச் செல்லப்போகும் நிலையிலும், “நாதிஸ்வஸ்தமநா: - மிகுந்த வருத்தம் கொண்ட மனம் உள்ளவனாக” என்று திருவுள்ளம் புண்பட்டது என்பது இரண்டாவது உதாரணம் ஆகும்.

வ்யாக்யானம் - “சரதல்பகதோ பீஷ்மச் சாம்யந்நிவ ஹுதாசந: | மாம் த்யாதி புருஷ வ்யாக்ரஸ்ததோமேதத் கதம்மந:” என்று கொண்டு சரதல்பகதரான ஸ்ரீபீஷ்மர்க்கு முற்பாடராய் உதவவேண்டியிருக்க, பிற்பாடரானோம் என்று நோவுபட்டாப்போலவும்;

விளக்கம் – மஹாபாரதம் சாந்தி பர்வத்தில் - சரதல்பகதோ பீஷ்மச் சாம்யந்நிவ ஹுதாசந: | மாம் த்யாதி புருஷ வ்யாக்ரஸ்ததோமேதத் கதம்மந: - புருஷார்களில் புலி போன்ற பீஷ்மர், அம்புகளால் ஆகிய படுக்கையில் கிடந்தவராக, அணைந்தபடி உள்ள நெருப்பு போன்றவராக, என்னை த்யானித்தபடி இருந்தார். எனது மனம் அவரிடம் சென்றது - என்பதற்கு ஏற்ப, அம்புப் படுக்கையில் கிடந்த பீஷ்மருக்கு முன்பே உதவி செய்ய வேண்டியதாக இருந்தபோது, பின்பு வந்தோம் என்று துன்பம் கொண்டான்; இது மூன்றாவது உதாரணம் ஆகும்.

வ்யாக்யானம் - (தேநதேதமநுவ்ரதா:) என்று என் முற்பாடு கண்டு அநுவர்த்திக்கக் கடவர்கள் முற்பாடராம்படி நாம் பிற்படுவதே என்றிருக்குமவனிறே;

விளக்கம் – “பின்பு வந்தோம் என்று துன்பம் கொள்கிறான்” என்று கூறிய பின்னர், இவ்விதம் அவன் துன்பம் கொள்வதற்கு ப்ரமாணம் காண்பிக்கிறார். இதற்கு “தேந” என்றும், “ப்ரஸீத” என்றும் தொடங்கி இரண்டு ப்ரமாணங்கள் கூறுகிறார். அயோத்யாகாண்டம் (17-15) – தேநதேதம் அநுவ்ரதா: – அயோத்தியில் உள்ள அனைவரும் இராமனைத் தொடர்ந்து வந்தனர் - என்பதற்கு ஏற்ப “நான் முதலிலேயே வந்து உதவுவதைக் கண்டு, என் பின்னே தொடர்ந்தபடி இருக்கவேண்டிய இவர்கள், எனக்கு முன்பாக “இந்தத் தன்மையை நான் கொண்டுள்ளேன்” என்பதை அறிந்து, என்னைப் பின் தொடர்கிறார்கள். ஆனால்

இவர்கள் இவ்விதம் செய்த பின்னர் அல்லவோ நான் உதவும்படி உள்ளேன்", என்று எண்ணி வருத்தம் கொள்கிறான்; இது முதல் ப்ரமாணம் ஆகும்.

வ்யாக்யானம் - இப்படிகளாலே திருவுள்ளம் போரவிரங்கி, "ப்ரஸீதந்து பவந்தோ மே ஹ்ரீரேஷா ஹிமமாதுலா | யதீத்ருசைரஹம் விப்ரைருபஸ்தேயைருபஸ்தித:" என்று தண்டகாரண்ய பரிஸர வர்த்திகளான ருஷிகளுடைய ஆர்த்திக்கு முற்பாடராய் உதவப் பெற்றிலோமென்னும் இழவாலே லஜ்ஜித்து, அவர்களைக் காலைக்கட்டிப் பொறுப்பித்துக் கொள்ளும் அவனிறே;

விளக்கம் – ஆரண்யகாண்டம் (10-9) – ப்ரஸீதந்து பவந்தோ மே ஹ்ரீரேஷா ஹிமமாதுலா | யதீத்ருசைரஹம் விப்ரைருபஸ்தேயைருபஸ்தித: - நான் வந்து அடையத்தக்கபடி உள்ள அந்தணர்களாகிய நீங்கள், என்னை வந்து அடையும்படியாக நான் உள்ளேன். எனக்கு இது நாணம் அளிப்பதாக உள்ளது. எனது இந்தக் குற்றத்தை நீங்கள் பொறுத்துக் கொள்ளவேண்டும் - என்பதற்கு ஏற்ப, தண்டகாரண்யத்தில் வசிக்கும் முனிவர்களுடைய துன்பம் கண்டு, முதலில் வந்து உதவவில்லையே என்ற நிலையால் வெட்கம் கொண்டு, அவர்களுடைய திருவடிகளில் விழுந்து, அவர்களைச் சமாதானம் செய்பவன் அல்லவோ; இது இரண்டாவது ப்ரமாணம் ஆகும்.

வ்யாக்யானம் – இனி, "வ்யஸநேஷு மநுஷ்யாணாம்" என்று ஸாமாந்யத்திலே இருக்கும்படி கண்டால், ப்ரணயிநி ஒருதலையானால் சொல்லவேண்டாவிறே.

விளக்கம் – அடுத்து, இவளுடைய பிரிவாற்றாமைத் துன்பம் கண்டு அவன் துக்கம் அடையும் விதத்தைக் கூறுகிறார். அயோத்யாகாண்டம் (2-40) - வ்யஸநேஷு மநுஷ்யாணாம் – மனிதர்களுக்கு துக்கம் ஏற்படும்போது, அவர்க்ளைக் காட்டிலும் இரண்டு மடங்கு துன்பம் அடைகிறான் - என்று இவன் அனைவருடைய விஷயத்திலும் பொதுவாகவே உள்ளான்; இப்படி உள்ளபோது, தனது காதலியானவள் இப்படியாகத் துக்கம் கொள்ளும்போதும், இவன் நிலையைக் கூறவேண்டாம் அல்லவோ?

வ்யாக்யானம் – "நாம் கிட்டி நின்று கையைக் காலைப் பிடிக்கவேண்டும் விஷயம், ஒரு திர்யக்கின் காலிலே விழும்படி நாம் பிற்படுவதே! நமக்கினியொரு பும்ஸ்த்வமாவதென்? நாம் அங்கு இனிப் போய்ச் செய்வதென்? இங்கிருந்து செய்வதென்?" என்று கொண்டு தடுமாறி, இத்தலையோடே கலந்தல்லது தரிக்கமாட்டாதானாய், இவர்களிருந்த விடத்துக்கு அதூர விப்ரக்ருஷ்டமாக வந்து, ப்ரணயகோபத்தாலே அணுக வொண்ணாதபடி யிருக்கிற இருப்பைக் கண்டு, "இத்தலையில் அபிஸந்தியைக் குலைத்து நாம் கூடினோமாம்படியென்?" என்று சிந்தித்து, "அழகு கொண்டு வெல்லுவோம்" என்று பார்க்கில், ஸௌந்தர்யம் கொண்டு தண்ணீர் வார்ப்பாரில்லை யிக்கோஷ்டியில்; "அஸிதேக்ஷணா" என்கிற தன்னேற்றம் உண்டிறே இத்தலைக்கு;

விளக்கம் – அடுத்து ஈச்வரன் செய்யும் விதங்களை விரிவாக அருளிச்செய்கிறார். ஸர்வேச்வரன் தனது திருவுள்ளத்தில், "நாம் சென்று கையையும் காலையும் பிடிக்க வேண்டியவளாகிய நாயகி, ஒரு பறவையின் காவில் விழும்படியாக நாம் காலதாமதம் செய்தோமே! நமக்கு ஒரு ஆண்மைத் தன்மை என்பது எப்படி? இனி அவள் உள்ள இடம் சென்று என்ன செய்வது? இங்கிருந்தபடியே நாம் செய்ய வேண்டியது என்ன?", என்று எண்ணித் தடுமாறினான். இனி அவளுடன் சேர்ந்தால் அல்லாமல் தன்னால் தரிக்க இயலாது என்று தீர்மானித்தான். இவர்கள் உள்ள இடத்தின் அருகே நேரே வந்தான். ஆனால் அவளோ, ப்ரணய கோபம் கொண்டவளாக, நெருங்க இயலாதபடி இருந்தாள். இதனைக் கண்ட இவன், "இவளுடைய இந்த எண்ணத்தைத் தகர்த்து நாம் எப்படிச் சேர்வது?" என்று சிந்தித்தான். "நம்முடைய அழகைக் கொண்டு இவளை வெல்வோம்" என்று எண்ணினான்; ஆனால் இவனுடைய அழகைக் கண்டு மயங்குபவர்கள் அவளிடம் யாரும் இல்லை, காரணம் அவள் அதிக அழகு கொண்டவள் ஆவாள் என்று இவன் தெரிந்து கொண்டான். அவள் அத்தகைய அதிகமான அழகா என்றால் ஸுந்தரகாண்டம் (16-5) - அஸிதேக்ஷணா – கருமையான கண்கள் கொண்டவள் – என்பதற்கு ஏற்ப அவளுக்கு மேன்மை உள்ளது.

வ்யாக்யானம் - இனி, "மேன்மை கொண்டு வெல்லுவோம்" என்று பார்க்கில், அந்த:புரத்தை ஆனைக்காலிட்டுத் துகைப்பித்து புஜிக்கவொண்ணாதே; இனி

இவ்விஷயத்தைப் பெறுகைக்குத் தாழ்ச்சியேயிறே பரிகரம்; அது இத்தலையின் கடாக்ஷம் பெறாதிருக்க ப்ரவர்த்திக்குமன்று நிஷ்ப்ரயோஜநமிறே; இனி இத்தனையும் செய்தால் ஆசையற்றுப் போகைக்குத் திருவடிகள் பேராதே; இசைவின்றிக்கே இருக்க, மேல்விழ மாட்டானே; இனி விழுக்காடு பாராதே மேல்விழுமன்று, ம்ருது ப்ரக்ருதியாகையாலே இழக்கவரிலும் வருமே; இனி, சேர்ந்து குளிர்ந்த தண்ணீர் ஸந்நிஹிதமாயிருக்க, பெருவிடாயனானவன் அழிஞ்சுக் காடேறப் போகமாட்டானே; அதாவது, "இவன் அல்பம் தாழ்த்தான்" என்று வெறுத்து, "புகுருவானல்லன் நம் கோஷ்டியில்" என்றிருக்கிற இவர்களை விட்டு நாட்டாரோடே உறவு பண்ணப்போவானன்றே; இனி "ஒருபடி பொருந்தினோமாம் விரகென்?" என்று கடல் கடந்த திருவடி பட்டதெல்லாம்பட்டு, "ராஜா தசரதோ நாம" என்னும் அளவன்றே; இனிச் செய்யவடுப்பதென்? என்று "ஏவம் பஹுவிதாம் சிந்தாம்" என்று மநோரதித்து, "நந்தலையும் அவர்கள் காலுங்கிடந்ததாகில் காலைக் கட்டிப் பொருத்திக் கொள்ளுகிறோம்" என்று அறுதியிட்டான். தலையான உபாயமிதிற் காட்டில்இல்லையே; இதுதான் அடியிலே கண்டதொன்றிறே.

விளக்கம் – அழகைக் கொண்டு வெல்ல இயலவில்லை. ஆகவே மேன்மையைக் கொண்டாவது இவளை வெல்லலாம் என்றால், அந்தப்புரத்தை பலாத்காரத்தால் வெல்ல இயலாது; காரணம் ரசிகத் தன்மைக்குப் பங்கம் ஏற்படும். இனி இவளைப் பெறுவதற்குத் தாழ்ந்து செல்வது மட்டுமே வழியாக உள்ளது. அப்படியானால் தாழ்ச்சி செய்து விடலாம் அல்லவோ என்பதற்கு விடை அளிக்கிறார். அத்தகைய தாழ்ச்சி என்பது, அவள் இவனுடைய பார்வையைப் பெறாமல் இருப்பதற்குத் தற்போது முயல்வதால், அந்தச் செயல் பலன் அளிக்காது. சரி, எவ்விதத்திலும் இவளை வழிக்குக் கொண்டு வர இயலாது என்று விலகிப்போகலாம் அல்லவோ என்பதற்கு விடை அளிக்கிறார்; இத்தனை முயற்சிகள் எடுத்த பின்னர் எந்தவிதமான ஆசைகளும் இன்றித் திரும்பிச் செல்வதற்கு திருவடிகள் இடம் அளிக்க மறுக்கின்றன. ஸர்வேச்வரன் மீது ஆசையில்லாமலும், சம்மதம் இல்லாமலும் இருந்தால் இவன் வருவதில்லை. அவளுடைய சம்மதம் இன்றி அது போன்று செய்தால், இவள் தன்மானம் நிறைந்தவள் என்பதால், இவளை இழப்பதற்கும் வாய்ப்பு உள்ளது. சரி, இவள் இவனுடைய விருப்பத்திற்கு இணங்கவில்லை என்றால், வேறு பெண்கள் உள்ளனர் அல்லவோ, அவர்களிடம் செல்லலாம் அல்லவோ என்பதற்கு விடை அருளிச்செய்கிறார். நன்றாகக் குளிர்ந்த

தண்ணீர் அருகில் உள்ளபோது, மிகவும் தாகம் கொண்ட ஒருவன், பாலை நிலம் நோக்கிச் செல்லமாட்டான். அதாவது, “இவள் வருவதற்கு, சிறிது காலம் தாழ்த்தினான்” என்று வெறுத்தவர்களாக, “இவன் நம் இடையில் சேர்வதற்கு அல்லன்” என்று உள்ள இவர்களை விடுத்து, நாட்டில் உள்ள மற்றவர்களுடன் உறவு கொள்ளமாட்டான். சரி, அனுமன் போன்று, திருநாமத்தை உச்சரித்து முயலலாம் அல்லவோ என்பதற்கு விடை அளிக்கிறார். “இனி சேர்வதற்கு வழி என்ன” என்று ஆராய்ந்து, கடல் கடந்த அனுமன் அடைந்த சங்கடங்கள் அனைத்தையும் அடைந்தாலும், ஸுந்தரகாண்டம் (31-20) – ராஜா தசரதோ நாம - தசரதன் என்ற பெயர் கொண்ட சக்ரவர்த்தி - என்று தொடங்கியது போன்று இவளிடம் செய்தாலும், பலன் அளிக்காது; காரணம், அங்கு ஸீதை ப்ரணய கோபம் கொண்டிருக்கவில்லை என்பதால் அனுமனின் ஸங்கீர்த்தனம் பயன் அளித்தது; இங்கு பயன் தராது. இனி செய்யக்கூடியது என்ன என்று எண்ணினான். ஸுந்தரகாண்டம் (31-1) - ஏவம் பஹுவிதாம் சிந்தாம் – இப்படியாகப் பலவிதமாக சிந்தித்து - என்பதற்கு ஏற்ப இவனும் எண்ணி, “நம் தலையும் அவள் காலும் ஒன்றாக உள்ளபோது, காலைக் கட்டிப் பொருத்திக் கொள்ளலாம்” என்று தீர்மானித்தான். இதனால் அவள் கோபம் மாறுமோ என்றால், இதனைக் காட்டிலும் மேலான உபாயம் இல்லை. இது மட்டுமே காகாஸுரன் முலமாக அறிந்து தெளிந்த உபாயமாக உள்ளது.

வ்யாக்யானம் - ஆக, இப்படி அறுதியிட்டு, தன்னிறத்தோடு ஒக்க விகல்பிக்கலாவதொரு சோலையுள்ளிட்டு அவளுக்கும் தோழிமார்க்கும் தெரியாதபடி கிட்டச் சென்று, அவர்களைக் காணப் பெறாதே விடாய்த்தவன் கண்களாரளவும் நின்று விளை நீரடைத்துக் கொண்டு க்ருதார்த்தனாய் நின்றான். ஆலோகாநந்தரம் ஆலாபாதிகளிலே ச்ரத்தை வர்த்திக்குமிறே, அதுவும் பெற்றிலன்; அவ்வளவிலும் தனக்கு ப்ராணதாரகமான இவர்களுடைய பூவை கிளி தொடக்கமானவற்றினுடைய இனிய பேச்சைக் கேட்கப் பெறாமையாலும் மிகவும் தளர்ந்து; “தானும் அவளுமானால் அவளிற் காட்டிலும் தன்பக்கல் ப்ரேமமிரட்டித்திறே தோழிமாரிருப்பது. பிரிவிலும் அப்படியே” என்றிருந்தான்; அவர்கள் அங்ஙனன்றிக்கே அவளிற் காட்டிலும் கோபமதிசயித்திருந்தார்கள். “ஸ ப்ராதுச் சரணௌ காடம்” என்று புருஷகாரம் முன்னாகத் தன்பக்கல் புகுந்தார்க்குத் தன் திருவுள்ளம் இரங்கும்படி தான் அறியுமே; இங்கு அப்படியே அவர்கள்

புருஷகாரமாகவும் பெற்றதில்லை; இனி இத்தலையி லிசைவுண்டானாலும் அவர்களிசையாதவன்று அழைக்கவும் போகாதே; “தத் தமஸ்யாபயம் மயா” என்றாலும், “வத்யதாம்” என்றவர் தம்மையிட்டே “ஆநய” என்ன வேண்டிற்றிறே; அவ்வழிகளாலும் ஒருமுகம் பெற்றிலன்.

விளக்கம் – இப்படியாகத் தீர்மானித்த பின்னர், தனது திருமேனி நிறத்துடன் சேர்ந்தும், தன்னை விட்டு வேறாகவும் உள்ள ஒரு சோலையில் புகுந்த நாயகியும் அவளுடைய தோழிமார்களும் அறியாதவிதத்தில் அவர்கள் அருகில் சென்றான். அவர்களை இதுவரை காண இயலாமல் தவித்தபடி இருந்தவன், அவர்களைத் தனது திருக்கண்கள் நன்கு பார்க்கும்படியாக நின்று, விளை நிலத்தில் போதுமான அளவு நீர் உள்ளது போன்று, தனது திருக்கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக, செய்யவேண்டியதைச் செய்தவனாக நின்றான். இப்படியாகப் பார்த்த பின்னர், பேசுதல் முதலான செயல்களில் மனம் ஈடுபாடு கொள்ளும் அல்லவோ? ஆனால் அதனை இவன் பெறவில்லை. இவர்களுடைய பேச்சைக் கேட்க இயலவில்லை என்றாலும், தனது உயிர் தரிக்க ஏதுவாக உள்ள இவர்களுடைய பூவை மற்றும் கிளி ஆகியவற்றின் இனிமையான பேச்சையும் கூடக் கேட்க இயலாமல் தளர்ந்தான். ஆனால், சமாதானம் செய்வதற்குத் தோழிமார்கள் இல்லையோ என்பதற்கு விடை அளிக்கிறார்; இவனும் அவளுமாகச் சேர்ந்து உள்ளபோது, அவனைக் காட்டிலும் தோழிமார்கள் இவனிடம் இரண்டு மடங்கு ப்ரேமை கொண்டிருப்பர்; பிரிந்துள்ள போதிலும் அது போன்ற நிலை உள்ளது என்று இருந்தான். அதாவது, அந்தத் தோழிகள் அவள் அருகில் உள்ளதால் தனக்காகப் பரிந்து பேசுவர் என்று இருந்தான். ஆனால் அவர்களோ இவன் எண்ணுவது போன்று அல்லாமல், அவனைக் காட்டிலும் இவனிடம் அதிகமான கோபம் கொண்டனர். சிபாரிசு செய்த ஒருவன் பிரிந்து பேசினால், கார்யம் கைகூடும் என்பதை எவ்விதம் அறிய இயலும் என்பதற்கு ப்ரமாணம் கூறுகிறார்; அயோத்யாகாண்டம் (31-2) – ஸ ப்ராதுச் சரணௌ காடம் - லக்ஷ்மணன் தனது மூத்தவனுடைய இரண்டு திருவடிகளையும் பற்றியபடி - என்று கூறுவதற்கு ஏற்ப, சிபாரிசு மூலம் தன்னிடம் புகுந்தவர்களுக்குத் தான் இரங்குவது குறித்து, இவனுடைய திருவுள்ளம் அறியும் அல்லவோ? ஆனால் இங்கு அது போன்று அவளுடைய தோழிமார்களின் சிபாரிசு இவனுக்குக் கிட்டவில்லை. ஆனால் எந்தக் காரணமும் இன்றி நாயகிக்கு சம்மதம் ஏற்படலாம் அல்லவோ என்பதற்கு

விடை அளிக்கிறார்; இவளுக்குச் சம்மதம் ஏற்பட்டபோதிலும், தோழிமார்களுடைய சம்மதம் இன்றி அழைக்க இயலாது. ஆனால் தோழிகளின் சம்மதம் இன்றி அழைக்க இயலாதோ என்பதற்கு விடை அளிக்கிறார்; யுத்தகாண்டம் (18-34) - தத் தமஸ்யாபயம் மயா – இவனுக்கு அபயம் அளிக்கப்பட்டது – என்று கூறியபோதிலும், "வத்யதாம் - இவன் கொல்லப்பட வேண்டியவன்" என்று உரைத்த சுக்ரீவனைக் கொண்டே, யுத்தகாண்டம் (18-34) – ஆநய - அழைத்து வா – என்று கூறலாம்படி ஆயிற்று அல்லவோ? ஆக எந்த ஒரு வழியிலும் நாயகியைக் காண இயலவில்லை; அதாவது பூவை மற்றும் கிளி ஆகியவற்றின் பேச்சு, தோழிமார்களுடைய பரிந்துரை, நாயகியின் சம்மதம் என்பதான பல வழிகள்.

வ்யாக்யானம் – "ந ஜீவேயம் க்ஷணமபி" என்றும், "க்ஷணேபி தே யத் விரஹோதிதுஸ் ஸஹ:" என்றும் க்ஷணமாத்ர விச்லேஷமும் பொறுக்கமாட்டாதவன், அவர்கள் ஸந்நிதியிலே முகம் பெறாமே நின்று பிழைக்கமாட்டானே. இனி இவன் தன் அணுகுதலாலே இவர்களிருந்தவிடம் அடங்கலும் "ஸோபயந் தண்டகாரண்யம்" என்கிறபடியே மயிற்கழுத்துச் சாயலாய், இவனுடைய நிரந்தர கடாக்ஷ பாதத்தாலே புளகிதகாத்ரைகளாய், இவனுடைய கடாக்ஷ பாதத்தால் உண்டான சைத்யம் இவர்களுடைய ப்ரணயரோஷத்தால் வந்த கோபாக்நியும் விரஹாக்நியுமன்றாகில் பொறுக்க வரிதாம்படியாய்;

விளக்கம் – ஸுந்தரகாண்டம் (66-10) - ந ஜீவேயம் க்ஷணம் அபி - ஒரு நொடியும் பிரிந்து பிழைக்கவல்லேன் – என்றும், ஸ்தோத்ரரத்னம் (56) – க்ஷணேபி தே யத் விரஹோதிதுஸ் ஸஹ: - ஒரு நொடிப்பொழுதும் கூட பிரிவாற்றாமை உனக்குப் பொறுக்க இயலாதபடி உள்ளதோ - என்றும் கூறுவதற்கு ஏற்ப, ஒரு நொடிப் பிரிவையும் கூடப் பொறுக்க இயலாதவன். அவர்கள் அருகில் உள்ளபோதிலும், முகத்தைக் காண்பது அல்லது உரையாடுவது நிகழவில்லை என்றால் பிழைக்கமாட்டான் அல்லவோ? இவ்விதம் இவன் தடுமாறியதை அறிந்த அவர்கள் செய்தது என்ன என்பதை "இனி இவன்" என்று தொடங்கி உரைக்கிறார். இவன் வந்ததை மூன்று வழிகள் மூலம் அறிந்த அவர்கள் உறுதியாக நின்று முகம் மாற்றி இருந்தனர். அந்த மூன்று வழிகள்: இவன் அங்கு வந்து சேர்ந்த காரணத்தால் அந்தப் பகுதி முழுவதும், ஆரண்யகாண்டம் (38-14) - ஸோபயந் தண்டகாரண்யம் - தண்டகாரண்யம் முழுவதும் நீல நிறமாககச் செய்து – என்று கூறுவதற்கு ஏற்ப,

மயில் கழுத்தின் நிறமானது; இவனுடைய எப்போதும் உள்ள கடாக்ஷம் காரணமாக அவர்கள் புளகாங்கிதம் நிறைந்த சரீரம் அடைந்தனர்; இவனுடைய கடாக்ஷம் மூலம் ஏற்பட்ட குளிர்ச்சியானது, இவர்களுடைய ப்ரணய கோபத்தால் ஏற்பட்ட கோபம் என்ற அக்னியும், விரகத்தால் ஏற்பட்ட கோபம் என்ற அக்னியும், பொறுப்பதற்கு இயலாதபடி இருந்தாலும் கூட, அங்கு ஓங்கி நிற்கவில்லை.

வ்யாக்யானம் - கோபந்தான் இவன் ஸந்நிதியிலே மிகைத்து வாரா நிற்குமிறே, இவ்வோ லக்ஷணங்களைக் கொண்டு இவன் வந்தமையை நிச்சயித்துத் தங்களிலே ஒருமித்து முகம் மாறியிருக்க; இவனும் அவ்விருப்பைக் கண்டு எதிரிகளிட்ட மதிளாகிலிறே முறித்துப் புகலாவது; கிட்டப் பெறாமையாலும் ஸந்நிதியாலும் ஆற்றாமை கரை புரண்டு கால் தரையில் பாவாதபடியாய்க் கொண்டு தடுமாறி வருகிற ஸமயத்திலே, இவனுடைய ஜீவநாத்ருஷ்டத்தாலே இவர்கள் மறந்து போன பந்தும் கழலும் இவன் காலிலே தாக்க; அப்போது, இருட்டறைகளிலே தடவிக் கொண்டு வாரா நின்றால் உறியும் வெண்ணெயும் கையிலே தாக்கினால் ஹ்ருஷ்டனாமாபோலே பெரிய ஹர்ஷத்தோடே விழுந்து இவற்றை எடுத்துக் கொண்டு, அத்தலையில் பண்ணின வ்யாமோஹம் அடங்கலும் இதிலே தோற்றும்படி கண்களிலே ஒற்றிக் கொள்வது, தலையிலே வைத்துக் கொள்வதாய், பிராட்டி திருவாழி மோதிரங் கண்டு பட்டதெல்லாம் பட்டான்.

விளக்கம் – இவன் இவர்களை விட்டு அகன்று நின்றால் கோபம் ஏற்படுகிறது, அருகில் வந்தால் கோபம் சற்றே குறையாதோ என்பதற்கு விடை அளிக்கிறார். அவன் அருகில் உள்ளபோது கோபம் அதிகமாகவே இருக்கும், ஏன்? விடை அளிக்கிறார். தாங்கள் இருந்த இடமானது மயில் கழுத்து போன்று நிறம் கொண்டதாக மாறியமை, தாங்கள் புளகாங்கிதம் நிறைந்த சரீரம் கொண்டவர்களாக மாறியமை, அதிகமாக வரும் கோபம் கொண்டவர்களாக நின்றமை ஆகிய தன்மைகள் கொண்டு அவனுடைய வருகையை இவர்கள் உறுதி செய்து காரணத்தால் முகம் மாறினர். இது போன்று இவர்கள் உள்ளதற்கு அவன் செய்தது என்ன? இவன் இவர்களுடைய அந்த இருப்பைக் கண்டு, எதிரிகள் அமைத்த மதிள் சுவர் என்றால் அல்லவோ அதனை உடைத்து உள்ளே புகுந்திருப்பான்? இவன் ஏன் அவ்வாறு செயயவில்லை என்பதற்குக் காரணம் கூறுகிறார்; இவன் அவர்களுடன் கலக்க இயலாத காரணத்தாலும், “கலக்க இயலவில்லை என்றாலும், வெகு தூரத்தில் இருந்தால் பொறுத்திருக்கலாம்.

ஆனால், அருகில் உள்ளபோதிலும் கலக்க இயலவில்லை என்பதால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை" என்ற காரணத்தாலும், இவன் தன்னுடைய பிரிவாற்றாமை என்பது கரைபுரண்டு நிற்பதால் கால்கள் தரையில் பாவாதபடி தடுமாறி ஓடி வந்தான். அப்போது இவனுடைய உயிருக்கு உள்ள அதிர்ஷ்டம் காரணமாக, இவர்கள் மறந்து விட்டுச் சென்ற பந்தும் கழலும் இவனுடைய திருவடிகளில் இடறின. இருட்டு அறையில் உணவைத் தேடியபடி தட்டுத் தடுமாறி வரும்போது, உறியும் வெண்ணெயும் கையில் அகப்பட்டால் மிகவும் மகிழ்வது போன்று, இவன் மிகுந்த மகிழ்ச்சியுடன் கீழே அமர்ந்து, அவற்றை எடுத்துக் கொண்டான். அவர்களுக்கு இவன் உண்டாக்கிய மயக்கம் முழுவதும் இவன் தனக்கு உண்டானது என்பது வெளிப்படும்படியாக, இந்தப் பந்தையும் கழலையும் கண்ணில் ஒற்றிக் கொள்வது மற்றும் தலையில் வைத்துக் கொள்வது ஆகியவற்றைச் செய்தான்; அதாவது, இராமனுடைய மோதிரத்தைக் கண்டு சீதை செய்த அனைத்தையும் இவனும் செய்தான்.

வ்யாக்யானம் - "க்ருஹீத்வா ப்ரேக்ஷமாணாஸா" ராவணன் மாயையாலே வந்ததோ? என்னும் பயத்தாலே முற்படக் கண்வைக்கமாட்டாதே இருந்தாள்; "அத்தலையாலே வந்தது" என்று தெளிந்த பின்பு கண் மாற வைக்கை வரிதாம்படியா யிருந்தாள். "அத்தலையாலே வந்தது" என்று தெளிந்த பின்பு கண் மாற வைக்கை அரிதாம்படியாய் இருந்தார்கள். "ஸா ப்ரேக்ஷமாணா" - "பச்ய தேவி" என்று கொண்டு முன்பு பார்வைக்கு க்ருஷி பண்ண வேண்டும்படி யிருந்தவள்தானே, கண் மாற வைக்கைக்கு க்ருஷி பண்ண வேண்டும்படியா யிருந்தாள். "பர்த்து: கர விபூஷணம்" முதல் கைப்பிடிக்கிறபோது உறுத்தினபடியை நினைத்தாள். "கர விபூஷணம்" அணிமிகு தாமரைக் கையிறே. ஆபரணத்துக்கு ஆபரணங்காணும். "பார்த்தாரமிவ" இவன் இத்தைத் திருக்கையிலே கொடுத்தவாறே, இத்தோடே சேர்ந்த விரலையும் தோளையும் நினைத்தாள்; அந்நினைவுதான், தான் இக்கரையில் ஆளாகவும் அவர் அக்கரையிலாளாகவும், கடல் இடையிலே கிடக்கிறதாகவும் அறிந்திலள்; ஒரு படுக்கையிலே கூடவிருந்ததாக நினைத்தாள்; ஒரு சூது சதுரங்கங்களிலே தோற்றுத் தன் கையிலிருந்ததாக நினைத்தாள்".

விளக்கம் – இராமனுடைய மோதிரத்தைக் கண்ட ஸீதை, அந்த அளவு துடித்தாளோ என்பதைக் கூறுகிறார்; ஸுந்தரகாண்டம் (30-4) – க்ருஹீத்வா ப்ரேக்ஷமாணா ஸா - இந்த மோதிரமானது இராவணனுடைய மாயையால் வந்ததோ - என்று அச்சம் கொண்டவளாக, முதலில் அதனைக் காணாமல் இருந்தாள். பின்னர், "இந்த மோதிரம் இராமனிடமிருந்து வந்தது" என்று தெளிந்த பின்னர், அந்த மோதிரத்திலிருந்துதனது கண் பார்வையை அகற்றவும் இயலாமல் இருந்தாள். இவர்களும், இத்தகைய மூன்றுவிதமான மாற்றங்கள் அவன் மூலமாக வந்தது என்றுள்ளபோது, தங்களுடைய பார்வையை அகற்ற இயலாமல் இருந்தனர். "ஸா ப்ரேக்ஷமாணா" - என்பதாக உள்ளதற்கு இயல்பு அருளிச்செய்கிறார்; ஸுந்தரகாண்டம் (36-2) – பச்ய தேவி – தேவீ! இதனைத் தாங்கள் பார்க்கவேண்டும் – என்று தொடக்கத்தில், இவளுடைய பார்வையானது அந்த மோதிரத்தின் மீது விழுவதற்கு, அனுமன் செயலாற்ற வேண்டும்படியாக இருந்தது; இப்படி இருந்த ஸீதை, பின்னர் அவளுடைய பார்வையை அதிலிருந்து திருப்பி, தான் உரைப்பதைக் கேட்க வைப்பதற்கு அனுமன் மீண்டும் செயலாற்ற வேண்டும்படியாக இருந்தாள். ஸுந்தரகாண்டம் (36-4) - பர்த்து: கர விபூஷணம் - தனது கணவனுடைய திருக்கரத்திற்கு ஆபரணமாக உள்ள மோதிரம் – அதாவது அவனுடைய திருக்கரத்தை முதன்முதலில் பற்றியபோது, அந்த மோதிரம் தனது கரத்தை உறுத்தியதை நினைவு கூர்ந்தாள். (கர விபுஷணம்) – அனைத்து ஜகத்திற்கும் ஆபரணமாக உள்ள இராமனுக்கு ஆபரணமாக உள்ள மோதிரம். (பர்த்தாரம் இவ) - அனுமன் இராமனுடைய மோதிரத்தைத் தனது திருக்கரத்தில் கொடுத்தவுடன், அந்த மோதிரத்துடன் சேர்ந்தபடி உள்ள இராமனுடைய விரலையும், இராமனுடைய தோள்களையும் எண்ணினாள். இத்தகைய நினைவு காரணமாக, தான் ஸமுத்ரத்தின் இந்தக் கரையிலும், இராமன் அந்தக் கரையிலும் உள்ளதையும், தங்களுக்கு நடுவில் ஒரு ஸமுத்ரம் உள்ளதையும் இவள் உணரவில்லை; ஒரே படுக்கையில், இராமனின் அருகில் தான் உள்ளதாகவே எண்ணினாள். ஆனால் இராமனுடன் இவன் உள்ளதாக எண்ணினால், அவனுடைய மோதிரம் தனது திருக்கரத்தில் உள்ளது எப்படி என்று சிந்திக்கமாட்டாளோ என்றால், ஒரு சூது அல்லது சதுரங்கம் மூலம் தோற்று தன்னிடம் வந்ததாக எண்ணினாள்.

வ்யாக்யானம் – "இவ" என்கிறான் ருஷி, ஜநநீ ஸமாதியாலே; இவளுணர்ந்தாலென்படக் கடவள் என்று. "ஜாநகீ" சோக ஹர்ஷங்களுக்கு இளையாத குடியிலே பிறந்தவள். "முதிதாபவத்" ஹ்ருஷ்டையானாள். அப்படியேயாயிற்று இவனும் இவை பெற்ற பின்பு. ஸம்ஸாரி முக்தனானால் அவனுடைய லீலோபகரணமும் போகோபகரணமும் ஸமமாய்த் தோற்றுமித்தனை. ஆகாராந்தரமான ஸ்ம்ருதியில்லையே; ததீயத்வாகாரத்தாலே நித்யவிபூதியோடொக்கத் தோற்றக் கடவது. அப்படியே இவளுடைய லீலோபகரணமும், போகோபகரணமாய்த் தோற்றக் கடவது.

விளக்கம் – மேலே உள்ள ஸுந்த்ரகாண்ட ச்லோகத்தில் "பர்த்தாரம் ஏவ ஸம்ப்ராப்தா - தனது கணவனையே அடைந்தாள்" என்று கூறுவதை விடுத்து, "பர்த்தாரம் இவ ஸம்ப்ராப்தா - தனது கணவனை இப்படியாக அடைந்தாள்" என்று ஏன் கூறவேண்டும் என்றால், அதற்கு இரண்டு சமாதானம் கூறுகிறார். தாயுடைய சேர்க்கை குறித்து உரைக்க இயலாத காரணத்தால் "இவ்விதம்" என்று வால்மிகீ கூறுகிறார். அல்லது, இரண்டாவது கருத்து, இவள் "உலகின் தாய்" என்பதால் ஆகும். இவ்விதம் தான் கணவனுடன் சேர்ந்ததை இவர்கள் அறியும்படியாக நாம் இருந்தோமா என்று நாணம் கொண்டு நின்றாள் என்பதை "இவள் உணர்ந்தால் என்படக் கடவ" என்று வ்யாக்யான வாக்கியம் கூறுகிறது; ஆகவே "ஏவ" என்பதற்குப் பதிலாக "இவ" என்று கூறினார். (ஜாநகீ) - இன்பம் மற்றும் துன்பங்களைக் கண்டு அஞ்சாத ஜனகனின் குலத்தில் பிறந்தவள். (முதிதாபவத்) மிகவும் மகிழ்ந்தாள். அது போன்றே இவனும் இவளுடைய பந்து, கழல்கள் போன்றவற்றைப் பெற்றவுடன் ஆனான். ஸம்ஸாரி ஒருவன் முக்தி பெற்றால் ஸர்வேச்வரனுடைய லீலைக்கு உபயோகமாக உள்ளவை மற்றும் இன்பத்திற்கு உபயோகமாக உள்ளவை ஆகிய இரண்டும் சமமாகவே தோன்றும்; இத்தகைய அனுபவம் என்பது கர்மம் காரணமாக வருவதில்லை என்பதால் இவ்விதம் தோன்றும்; அவனுடைய அடியார் என்ற தன்மை காரணமாக அனைத்துமே நித்யவிபூதி போன்றே தோன்றுகிறது. அது போன்றே இவளுடைய விளையாட்டுப் பொருள்கள், இவனுக்கும் இன்பம் அளிப்பவையாக உள்ளன.

வ்யாக்யானம் - அவற்றிலே அவன் பண்ணும் வ்யாமோஹத்தைக் கண்டார்கள். "நம்மைப் பிரிந்த பின்பு ஸத்தையோடே குறியழியாமே யிருக்கக்கடவ, இவன்

இவையெல்லாம் நம்மை உத்தேசித்துச் செய்கிறானாகக் கூடாது; இங்ஙனேயாக வேணும்" – "நம்மைப் பிரிந்த பின்பு போய்ச் சிலரோடே கலந்தான்; அவர்களையும் பிரிந்தான்; அவ்வாற்றாமையோடே இங்கு வந்தான்; இவற்றை 'அவர்களுடைய லீலோபகரணமா யிருக்கும்' என்று ப்ரமித்தானித்தனை, இது நம்பக்கல் வ்யாமோஹமுடையனாய்ச் செய்கிறானல்லன்" என்று கொண்டு, இவர்களிருக்க, அவனும் தன்னழகாலும், குணங்களாலும், தன் செல்லாமைகளாலும், தாழ்ச்சிகளாலும் இத்தலையில் ஊடலைத் தீர்த்து ஸம்ச்லேஷித்தபடி சொல்லுகிறது இத்திருவாய்மொழி.

விளக்கம் – தங்களுடைய பந்து, கழல்கள் போன்வற்றில் அன்பு காண்பிக்கும் இவனைக் கண்டு அவர்கள் என்ன செய்தனர் என்பதைக் கூறுகிறார். அவற்றில் அவன் காண்பிக்கும் மயக்கத்தைக் கண்டனர். அவர்கள் தங்கள் மனதில், "இவன் நம்மைப் பிரிந்த பின்னர், தனது இருப்பு என்பதன் அடையாளம் அழியாமல் இருப்பதற்காக, இவன் இது போன்று இவற்றின் மீது அன்பு காண்பிப்பது என்பதை, நம்மைக் கருத்தில் கொண்டு செய்கிறான் என்று நாம் எண்ணி விடக்கூடாது. இதன் கருத்து இப்படியாக இருக்கவேண்டும்; நம்மைப் பிரிந்த பின்னர் இவன் வேறு யாருடனோ சேர்ந்துள்ளான். அவர்களையும் பிரிந்தான். அந்தப் பிரிவாற்றாமையுடன் இங்கு வந்தான். நம்முடைய பந்து, கழல் போன்றவற்றைக் கண்டு, இவை அனைத்தும், அவ்விதம் பிரிந்தவர்களுடையதாக இருக்கவேண்டும் என்று மகிழ்ந்தான். இதனை நம்மிடம் காதல் கொண்டு இவன் செய்யவில்லை", என்று இவர்கள் இருந்தனர். இதனை கண்ட அவன் தன் அழகாலும், குணங்களாலும், தன் செல்லாமையாலும், தாழ்ச்சிகளாலும் இவனுடன் ஏற்பட்ட ஊடலைத் தீர்த்துக் கொண்டு, ஒன்றாகச் சேர்ந்தான் என்பதே இந்தத் திருவாய்மொழியின் கருத்தாகிறது.

வ்யாக்யானம் - இனி, இத்திருவாய்மொழி தன்னை, பூர்வாசார்யர்கள், "பகவத் விஷயத்தில் ஸாபத்ந்யந்தோற்ற வார்த்தை சொல்லுகை சேஷத்வ லக்ஷணமன்று, 'வளவேழுலகி'ற்படியாலே அயோக்யதாநுஸந்தநம் பண்ணுகிறார்" என்று நிர்வஹிப்பர்கள். இத்தைப் பட்டர் கேட்டு, "என் சொன்னாரானார்கள்! இவர்க்கு பகவத் விஷயத்திலுண்டான ருசிக்கு ப்ரகாசகம் இத்திருவாய்மொழியாயிருக்கும்; இதுக்கு வேறே ஒருவழியிடுவதே! ஆன பின்பு இதுவே பொருளாமித்தனை"

என்றருளிச் செய்தார். "ஹநிஷ்யாமி ஸ பாந்தவம்" என்று மஹாராஜரோடே பெருமாளுக்குக் கிலாய்க்கைக்கும் உறவுண்டாயிற்றிறே.

விளக்கம் - அடுத்து இந்தத் திருவாய்மொழிக்கு ஸ்வாமி பராசர பட்டருக்கு முன்பாக இருந்த பூர்வாசார்யர்கள் கூறியதை அருளிச்செய்கிறார்; அவர்கள் கூறுவது, "பகவத் விஷயத்தில் இது போன்று ப்ரணய கோபம் வெளிப்படும்படியான சொற்க்ளைக் கூறுதல் என்பது அடிமைத்தனத்தின் அடையாளம் அல்ல. ஆகவே, 'வளவேழ் உலகு' என்ற திருவாய்மொழியில் உள்ளபடி, தனது தாழ்ச்சியை வெளிப்படுத்துகிறது", என்பதாகும். இதனைக் கேட்ட பட்டர், "என்ன இவ்வித்ம உரைத்தார்கள்? இவருக்கு பகவத் விஷயம் குறித்து ஏற்பட்ட ருசியானது வெளிப்பட்டது, இந்தத் திருவாய்மொழியாகவே உள்ளது. இவ்விதம் உள்ளபோது இதற்கு வேறு கருத்து கூறுவது ஏன்? இவ்விதம் கூறிய பின்னர் இதுவே பொருளாக அமைகிறது", என்று அருளிச்செய்தார். ஆனால் ஈடுபாட்டின் மிகுதியைத் தங்கள் ப்ரணய கோப கொண்டு வெளிப்படுத்தியவர்கள் வேறு யாரும் உள்ளனரோ என்பதற்கு ப்ரமாணம் காண்பிக்கிறார். கிஷ்கிந்தாகாண்டம் (30-82) – ஹநிஷ்யாமி ஸ பாந்தவம் – ஸத்யம் மீறிய உன்னை உனது உறவினர்களுடன் சேர்த்துக் கொல்வேன் - என்று இராமன் ஸுக்ரீவனுடன் ப்ரணய கோபம் போன்று உரைத்தது காண்க.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி ஆளவந்தார் அருளிச் செய்த

ஸ்தோத்ர ரத்னம்

இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை
அருளிச் செய்த வ்யாக்யானம்
(பகுதி – 114)

62. அமர்யாத: க்ஷுத்ர: சல மதிர்: அஸூயா ப்ரஸவ பூ:
க்ருதக்ந: துர்மாநீ ஸ்மர பரவச: வஞ்சநபர:
ந்ருசம்ஸ: பாபிஷ்ட: கதம் அஹம் இத: து:க்க ஜலதே:
அபாராத் உத்தீர்ண: தவ பரிசரேயம் சரணயோ:

பொருள் - வேதங்களில் விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டுகளை மீறியவனும், தாழ்ந்த விஷயங்களில் மிகுந்த சபலம் கொண்டவனும், நிலையற்ற புத்தி உள்ளவனும், மற்றவர்களுடைய நற்குணத்தையும் தோஷம் நிறைந்ததாகக் காணும் பொறாமை நிறைந்தவனும், நன்மை செய்பவர்களுக்கும் கூட தீமையைச் செய்பவனும், தாழ்ந்த கர்வம் நிறைந்தவனும், காம வசப்பட்டவனும், வஞ்சனைகள் நிறைந்தவனும், கொடிய செயல்களைச் செய்பவனும், பாபம் செய்தபடி உள்ளவனும் ஆகிய நான், கரை காண இயலாதபடி உள்ள ஸம்ஸாரத்துன்பம் நிறைந்த இந்த ஸமுத்திரத்திலிருந்து கரையேறி, உனது திருவடிகளில் எப்போது கைங்கர்யம் செய்வேன்?

அவதாரிகை – “இவ்வம்சத்தில் ஜன்மத்தையும் அஸத் ஸமமாக்கவல்ல பாபம் உமக்கு ஏது?” என்ன, “பாபாத்மா” என்கிறத்தைப் பரக்கப் பேசுகிறார்.

விளக்கம் – ஸர்வேச்வரன் இவரிடம், "இந்தக் குலத்தில் பிறவியையும் இல்லாதபடி செய்யவல்ல பாபம் உம்மிடம் என்ன உள்ளது?", என்றான். இதற்கு இவர், "நான் பாபங்களின் இருப்பிடம்", என்பதை விரிவாகக் கூறுகிறார்.

வ்யாக்யானம் - (அமர்யாத:) வேதமர்யாதைக்கு பஹிர்ப்பூதன். (க்ஷுத்ர:) க்ஷுத்ரத்வமாவது நீச விஷயங்களில் அதி சபலன்; உஜ்ஜீவன ஹேதுவான வேதமர்யாதையை அனாதரித்து, அதுக்கு மேலே விநாச ஹேதுவான நீச ஸேவையிலே அதி சபலன். (சலமதி:) "நீச விஷய ப்ராவண்யம் நாச ஹேது; வேத ப்ரதிபாத்ய விஷயமே உத்தேச்யம்" என்று ஒரு ஜ்ஞாநாதிகன் ஹிதம் சொன்னால், அதில் வ்யவஸ்தித சித்தனல்லேன். (அஸூயா ப்ரஸவ பூ:) பர குணங்களிலே தோஷத்தை உண்டாக்குகைக்கு உத்பத்தி ஸ்தானம். தனக்கு தோஷமுண்டாமளவன்றிக்கே, பிறர் குணங்களிலும் தோஷத்தை உண்டாக்குமவன் என்கை.

விளக்கம் – (அமர்யாத:) - வேதங்களின் உயர்த்தி என்பதற்கு வெளியில் நிற்பவன். (க்ஷுத்ர:) - க்ஷுத்ரம் என்றால் தாழ்ந்த விஷயங்களில் மிகுந்த சபலம் கொண்டவன். பிழைப்பதற்குக் காரணமாக உள்ளதான வேதங்களின் உயர்த்தியை ஒதுக்கித் தள்ளி, அத்துடன் நிற்காமல், அழிவதற்குக் காரணமாக உள்ள தாழ்ந்த விஷயங்களில் மிகுந்த சபலம் கொண்டவன். (சலமிதி) – "தாழ்ந்த விஷயங்களில் ஈடுபாடு கொள்வதே அழிவிற்குக் காரணம். வேதங்களில் கூறப்பட்ட விஷயமே கைக்கொள்ளத்தக்கது", என்று ஞானம் கொண்டவர்கள் நன்மை அளிக்கும் சொற்களைக் கூறினாலும், அதில் உறுதியான சித்தம் கொண்டவன் அல்லன். (அஸூயா ப்ரஸவ பூ:) - உயர்ந்த குணங்களில் தோஷம் கூறுவதை ஏற்படுத்தும் இடம்; பொறாமை. தனக்கு தோஷம் உள்ளது மட்டும் அல்லாமல், மற்றவர்களுடைய நற்குணங்களிலும் தோஷங்களைக் கற்பித்தல்.

வ்யாக்யானம் - (க்ருதக்ந:) உபகரித்த விஷயத்திலே அபகாரத்தைப் பண்ணுகை. "கோக்நேசைவ ஸுராபே ச சோரே பக்ந வ்ரதே ததா | நிஷ்க்ருதிர் விஹிதா ஸத்பி: க்ருதக்நே நாஸ்தி நிஷ்க்ருதி:" என்று மாதா பித்ரு சதத்திலும் வத்ஸலதரமான சாஸ்த்ரத்திலும் பஹிஷ்க்ருதனென்கை. (துர்மாநீ) இப்படி நிக்ருஷ்டனாயிருக்கச்

செய்தேயும் ஸர்வோத்க்ருஷ்டருக்கு அவ்வருகாகத் தன்னை நினைத்து, “ஈஸ்வரோSஹம்” என்று இருக்குமவன். (ஸ்மர பரவச:) தன்னை உத்க்ருஷ்டாத்மாக்களுக்கும் மேலாக நினைத்திருக்கிறவளவன்றிக்கே, விஷய ப்ராவண்ய ஹேதுவான காமனுக்குப் பரதந்த்ரனாகவும், பகவத் ப்ராவண்ய ஹேதுபூதரானாரைத் தாழ நினைத்தும் அனர்த்தப்பட்டேனென்கை. (வஞ்சநபர:) காம பாரவச்யத்தாலே விஷயங்களிலே ப்ரவணனாய், அவ்விஷயங்களிலும் த்ரவ்யங்களை வஞ்சித்து வர்த்திக்குமவன். “சூதனாய்க் கள்வனாகி”, “சூதினைப் பெருக்கிக் களவினைத் துணிந்து” என்று சொல்லுகிறபடியே.

விளக்கம் - (க்ருதக்ந:) - உதவி செய்த விஷயத்தில் துன்பத்தை ஏற்படுத்துதல். கிஷ்கிந்தா காண்டம் (34-12) – கோக்நேசைவ ஸுராபே ச சோரே பக்ந வ்ரதே ததா | நிஷ்க்ருதிர் விஹிதா ஸத்பி: க்ருதக்நே நாஸ்தி நிஷ்க்ருதி: - பசுவைக் கொன்றவன், மதுபானம் பருகியவன், விரதத்திற்குத் தடை ஏற்படுத்தியவன் ஆகியோர் குறித்து உயர்ந்தவர்களால் தகுந்த பிராயச்சித்தம் விதிக்கப்பட்டுள்ளது; ஆனால் செய்ந்நன்றி மறந்தவன் விஷயத்தில் பிராயச்சித்தம் இல்லை - என்று கூறுவதற்கு ஏற்ப, ஆயிரம் தாய் தந்தையைக் காட்டிலும் வாத்ஸல்யம் மிகுந்த சாஸ்த்ரத்திலிருந்து தூரமாக உள்ளவன். (துர்மாநீ) - இப்படியாகத் தாழ்ந்தவனாக உள்ளபோதிலும், அனைத்து விஷயங்களிலும் உயர்ந்தவர்களுக்கு நிகராக உள்ளதாக எண்ணி, கீதை (16-14) – ஈச்வர: அஹம் - நானே ஈச்வரன் – என்று எண்ணியபடி உள்ளவன். (ஸ்மர பரவச:) – தன்னை, உயர்ந்தவர்களைக் காட்டிலும் மேலாக நினைப்பதுடன் மட்டும் அல்லாமல், தாழ்ந்த விஷயங்களுக்குக் காரணமாக உள்ள காமனுக்கு வசப்பட்டவனாகவும், பகவத் விஷயத்தில் ஈடுபாடு ஏற்படக் காரணமாக உள்ளவர்களைத் தாழ்வாக எண்ணியும், மேலும் தாழ்மை அடைந்தேன். (வஞ்சநபர:) - காமத்தின் வசப்பட்டதால் உலக விஷயங்கலில் ஈடுபாடு கொண்டவனாக, அந்த விஷயங்களிலும் பொருள்களை வஞ்சகம் செய்து வளர்த்தபடி உள்ளவன்; திருமாலை (13) – சூதனாய்க் கள்வனாகி - என்றும், பெரியதிருமொழி (1-6-3) - சூதினைப் பெருக்கிக் களவினைத் துணிந்து - என்றும் கூறுவதற்கு ஏற்ப நான் உள்ளேன்.

வ்யாக்யானம் - (ந்ருசம்ஸ:) தான் விரும்பின விஷயங்களில் வஞ்சகனாயன்றிக்கே, தன்னை விச்வஸித்திருப்பார் பக்கல் க்ரூர கர்மாவாயிருக்குமவன். (பாபிஷ்ட:) இதுக்கெல்லாம் அடி பாப ருசியாய், அதிலே வ்யவஸ்திதனாயிருக்கை. "பாவமே செய்து பாவியானேன்", "ஒப்பிலாத் தீவினையேன்", "நானே நானாவித நரகம் புகும் பாவம் செய்தேன்", "அஹமஸ்ம்யபராதாநாமாலய:", "ராவணோ நாம துர்வ்ருத்த:", "நீசனேன் நிறைவொன்றுமிலேன்" என்று அறிவுடையார் தந்தாமைப் பேசும்படியான பாபத்திலே நிஷ்டையுடையவன். (அபாராத் து:க்க ஜலதே: கத,ம் உத்தீர்ண:) ஒரு நாளிலே தொடங்கின து:க்கமென்னுதல், மேல் ஒரு நாளிலே முடிவு காணுதல் செய்யுமதல்லாமையாலே, த்ருஷ்டி விஷம் போலே காணவே பயமாயிருக்கிற து:க்க ஸாகரத்தில் நின்றும். (கதமுத்தீர்ண:) இதில் அழுந்திக் கிடக்கிற நான் கரையேற வென்பதொன்று உண்டோ? "முத்தனார்" என்கிறபடியே அஸ்ப்ருஷ்ட ஸம்ஸார கந்தரான தேவரே கரையேற்ற வேண்டுமென்கை. (தவ சரணயோ: கதம் பரிசரேயம்) துக்க நிவ்ருத்திக்கும் அக்ஷமனாயிருக்கிற நான், நித்யஸூரிகள் அடிமை செய்கிற தேவர் திருவடிகளிலே எங்ஙனே பரிசர்யை பண்ணுவன்? து:க்க நிவ்ருத்தியும் தேவருக்கே பரம்; அடிமை கொள்ளுகையும் தேவருக்கே பரமென்கை.

விளக்கம் – (ந்ருசம்ஸ:) - தான் விரும்பிய விஷயங்களில் வஞ்சகனாக இருப்பதுடன் மட்டும் அல்லாமல், தன்னை நம்பியவர்களிடமும் கொடூரமான செயல்கள் கொண்டவன். (பாபிஷ்ட:) - இவை அனைத்திற்கும் காரணம், பாபத்தில் உள்ள ருசி ஆகிறது. அதில் நிலைத்தபடி உள்ளேன். பெரியதிருமொழி (1-9-9) - பாவமே செய்து பாவியானேன் – என்றும், திருவாய்மொழி (7-9-4) - ஒப்பிலாத் தீவினையேன் – என்றும், பெரியதிருமொழி (1-9-2) - நானே நானாவித நரகம் புகும் பாவம் செய்தேன் – என்றும், அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (37-29) – அஹம் அஸ்மி அபராதாநாம் ஆலய: – நான் குற்றங்களின் இருப்பிடமாக உள்ளவன் - என்றும், யுத்தகாண்டம் (17-12) - ராவணோ நாம துர்வ்ருத்த: – தீய செயல்கள் கொண்ட இராவணன் – என்றும், திருவாய்மொழி (3-3-4) - நீசனேன் நிறைவொன்றுமிலேன் – என்றும், அறிவு நிறைந்தவர்கள் கூறும்படியாக பாபத்தில் பிடிப்பு உள்ளவன். (அபாராத் து:க்க ஜலதே: கத,ம் உத்தீர்ண:) - ஒரு நாளில் தொடங்கிய துக்கம், ஒரு நாளில் முடியாமல், காண்பதன் மூலமே கொல்லும் விஷம் போன்று, காண்பதற்கு அச்சத்தை ஏற்படுத்தவல்ல துக்கம் என்ற ஸமுத்ரத்தின் கரையில் நின்று. (கதம்

உத்தீர்ண:) – இந்தக் கடலின் ஆழத்தில் உள்ள நான் கரையேறுவது என்பது உள்ளதோ? திருச்சந்தவிருத்தம் (115) – முத்தனார் - என்பதற்கு ஏற்ப, ஸம்ஸார துக்கம் என்பதே இல்லாமல் உள்ள நீயே என்னைக் கரையேற்றவேண்டும். (தவ சரணயோ: கதம் பரிசரேயம்) - எனது துக்கம் நீங்கும்வரை பொறுமையுடன் இருக்க இயலாத நான், நித்யஸூரிகள் கைங்கர்யம் செய்தபடி உள்ள உனது திருவடிகளில் எப்படிக் கைங்கர்யம் செய்வேன்? எனது துக்கத்தை விலக்குவதும் உன் பொறுப்பு. என்னை அடிமையாக்கிக் கொள்வதும் உன் பொறுப்பு ஆகும்.

ஸ்வாமி ஆளவந்தார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்